# தமிழ்வாணனின் தலைசிறந்த
# நகைச்சுவைக்
# கேள்வி - பதில்கள்

---

கேள்வி : உங்கள் நண்பன் யார்?

பதில் : மூட்டைப்பூச்சி. இது தானே என்னைத் தூங்கவிடாமல் எழுந்து உட்கார்ந்து எழுதும்படி செய்கிறது! 6-7-61

கேள்வி : சினிமாத் தொழிலை அரசாங்கமே எடுத்து நடத்தினால்?

பதில் : இப்போது வந்து கொண்டிருக்கிற இரண்டொரு நல்ல படங்களும் வாராமல் நின்று விடும்! 13-7-61

கே: உங்களை என்ன கேள்வி கேட்பதென்றே எனக்குத் தெரியவில்லை!

ப: என்னை என்ன கேட்பது என்று உங்களுக்குத் தெரியவில்லை! நீங்கள் என்ன கேட்டிருக்கிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை! நாம் புரிந்து கொள்ள வேண்டியதும் இன்னும் தெரிந்து கொள்ள வேண்டியதும் இன்னும் நிறைய இருக்கின்றன என்பது இதிலிருந்து தெரிகிறது! 13.7.61

கே: மூட்டைப் பூச்சிகளைப் போக்கப் பல மருந்துகளை உபயோகப்படுத்தியும் மூட்டைப் பூச்சிகள் போகவில்லை! அவற்றைப் போக்க என்ன செய்யவேண்டும்?

ப: மூட்டைப் பூச்சிகளைக் காலி செய்ய முடியாவிட்டால், நீங்கள் அந்த இடத்தைக் காலி செய்துவிட்டு வேறு இடத்திற்குப் போக வேண்டியதுதான்! 13.7.61

கே: தமிழ்நாட்டில் அழகான நடிகை யார்?

ப: அழகிகளாக இருக்கும் பெண்கள் இன்னும் சினிமாவிற்கு நடிக்க வரவில்லையே! 8.3.62

கே: நீங்கள் இரவில் தனியாக ஒரு சைக்கிளில் போய்க் கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது ஒரு புலி வந்து விட்டால் என்ன செய்வீர்கள்?

ப: சைக்கிளை அந்தப் புலியிடம் கொடுத்துவிட்டு நடந்து வந்துவிடுவேன்! எற்கனவே ஒரு புலிக்கு

(புலித்தேவன்) என் காரை நான் கொடுத்திருக்கிறேனே! 8.3.62

கே: காமராஜருக்கு ஒருவர் திலகம் வைத்தாராமே. இப்படி ஆணுக்கு ஆண் திலகம் வைக்கலாமோ?

ப: வைத்தால் என்ன? ஒருவருக்கு ஒருவர் திலகம் வைத்து விடலாம். நாமந்தான் போட்டுவிடக் கூடாது!

5.4.62

கே: 'காலங்களில் அவள் வசந்தம், கலைகளிலே அவள் ஓவியம்' என்று சினிமாவில் ஒரு பாட்டு இருக்கிறதே, இதற்கு என்ன அர்த்தம்?'

ப: காலங்களில் அவள் வசந்தம் என்றால் அவளோடு பழகுகிறவர்களுக்குப் போர்வை வேண்டும் என்று அர்த்தம். கலைகளில் அவள் ஓவியம் என்றால் அவள் ஓவியமாதலால் அவள் பேசமாட்டாள் பதில் சொல்ல மாட்டாள். நாமாகக் கத்திக் கத்திச் செத்துக் கொண்டிருக்க வேண்டியதுதான் என்று அர்த்தம்!

5.4-62

கே: இந்த மெட்ரிக் எடைகள் எனக்குப் புரியவில்லையே!

ப: நீங்கள் ஒரு மெட்ரிக்காக (படித்தவராக) இருந்தால் தான் இந்த மெட்ரிக் எடைகளைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியும்! இல்லாவிட்டால் இந்த விவகாரங்கள் புரியாது! 24.5.62

கே: குழந்தை பிறக்கும்போதே அழுகிறதே. காரணம் என்ன?

ப: பிறக்கும்போதே ஆடையில்லாமல் பிறக்கிறோமே என்ற அவமானம் காரணமாக இருக்கலாம்!

24.5.62

கே: மந்திரிகள் ஏன் அடிக்கடி வெளிநாடுகளுக்குப் போகிறார்கள்?

ப: மற்ற நாடுகளில் மந்திரிகள் எப்படியிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து வர.

28.6.62

கே: மனிதருள் மாணிக்கம் யார்?

ப: மாணிக்கம் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்களே, அவர்கள் எல்லாந்தாம்!

5-7-62

கே: ஏ. எல். சீனிவாசன் கண்ணதாசனுக்கு சொந்தம் என்கிறாரே என் நண்பர்? என்ன சொந்தம்?

ப: சும்மா, கூடப் பிறந்த அண்ணன் தம்பி சொந்தந்தான்! வேறே சொந்தம் எதுவும் இல்லை!

5.7.62

கே: ஒரு வாலிபனின் பெரிய வெற்றியும் பெரிய தோல்வியும் எது?

ப : பெரிய வெற்றி, முன்பு அவன் குழந்தையாகஇருந்தது. பெரிய தோல்வி, பின்பு அவன் கிழவனாகப் போவது!
5.7.62

கே: நான் கவிஞனாக விரும்புகிறேன். முதலில் இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

ப : தமிழை இயன்றவரை, பிழையோடு எழுதிப் பழக வேண்டுமே! பழக்கமிருக்கிறதா உங்களுக்கு? அப்படி யானால்தான் இன்றைய நிலையில் நீங்கள் கவிஞனாக முடியும். இலக்கணம் தெரிந்திருந்தால் நீங்கள் கவிஞனாக இருக்க முடியாது! 5.7.62

கே: ம.பொ.சி.க்கும் சம்பத்துக்கும் என்ன தொடர்பு?

ப: எந்தத் தொடர்புமில்லை! தொடர்பை உண்டாக்க இருந்த மீசையைக்கூடச் சம்பத் எடுத்து விட்டாரே!
5.7.62

கே: பெண்களுக்கு ஏன் மீசை தாடி வளர்வதில்லை?

ப: இதற்கெல்லாம் சேர்த்துதான் அவர்களுக்குத் தலையில் வளர்கிறதே! 5.7.62

கே: திருக்குறளில் இடைச் செருகல் உண்டா?

ப: படித்துக் கொண்டிருக்கும்போது, படித்த பக்கத்தில் அடையாளத்துக்காக, சிறு காகிதத் துண்டைச் செருகி வைத்தால் அதுதான் இடைச்செருகல். வேறு இடைச் செருகல் இல்லை! 5.7.62

கே: தங்களுக்குப் பிரதம மந்திரி பதவியோ, ஜனாதிபதி பதவியோ கொடுத்தால். அப்போது என்ன எண்ணுவீர்?

ப: முதல் தேதியில் சம்பளத்தை எண்ணுவேன். மற்ற தேதிகளில் இந்தப் பதவியில் இன்னும் எத்தனை நாள்களுக்கு இருக்கப் போகிறோம் என்று எண்ணு வேன்! 5.7..62

கே: ரஷ்யாவில் குருச்சேவ் திடீரென இறந்துவிட்டால் என்ன நடக்கும்?

ப: சவ அடக்கம் நடக்கும். 5.7.62

கே: நான் ஒரு சினிமாவைப் பார்த்துவிட்டுப் பிறகு அந்தக் கதையை நினைத்துப் பார்த்தால் அது மறந்துபோய் விடுகிறது!

ப: நீங்கள் பாக்கியசாலி! நான் தப்பித் தவறி ஒரு சினிமாவைப் பார்த்து விட்டால் அதை மறக்க

முடியாமல் அல்லவா கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன்! 12.7.62

கே: ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் வித்தியாசம் என்ன?

ப: ஏழைகளுக்கு உணவு கிடைக்கவில்லை. பணக்காரர்களால் உண்ட உணவை ஜீரணம் செய்ய முடியவில்லை. இதுதான் இப்போதுள்ள வித்தியாசம். 19.7.62

கே: தமிழன் தலைகுனிந்தே நடப்பதற்குக் காரணம் என்ன?

ப: இத்தனை கட்சிகள் இருக்கின்றனவே இந்த நாட்டில் என்றுதான்! இரண்டு கட்சிகளுக்கு மேல் இருந்த நாடு உருப்பட்டதில்லை என்ற சரித்திரத்தைத் தமிழன் படித்திருக்கிறானே! 19.7.62

கே: நாம் ஆங்கிலம் கற்றதால், அடைந்த பயன் என்ன?

ப: ஆங்கிலத்தில் பேசிப் பேசியே ஆங்கிலேயர்களை அனுப்பி வைத்தோமே. அதுதான்! 19.7.62

கே: மனிதன் முதன்முதலில் எந்தத் தேசத்தில் தோன்றினான்?

ப: கடவுளின் உத்தேசத்தில்தான் மனிதன் முதன்முதலில் தோன்றினான். 19.7.62

கே: பெரியாரின் மணிப்பர்சை யார் எடுத்திருப்பார்கள்?

ப: பெரியாரைப் பற்றித் தெரியாத திராவிட நாட்டுக்காரன் எவனாவதுதான் எடுத்திருப்பான். பெரியாரைப் பற்றித் தெரிந்தவன் பெரியார் பர்சைத் தொடுவானா? 19.7.62

கே: யாரிடத்திலும் அதிகம் பேசாமல் இருப்பவனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: ஒன்று அவன் துறவு மனப்பான்மை கொண்டவனாக இருக்கவேண்டும். அல்லது அவன் தொண்டையில் புண் உள்ளவனாக இருக்கவேண்டும். 19.7.62

கே: நானும் என் நண்பனும் ஒரே நேரத்தில் ஒரே பாட்டைப் பாடத் தொடங்கி விடுகிறோமே என்ன காரணம்?

ப: ஒருவர் பாட்டைக் கேட்க இன்னொருவர்க்குச் சகிக்கவில்லை என்பதுதான் காரணமாக இருக்கமுடியும். 19.7.62

கே: குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டமுடியுமா?

ப: ஓட்டலாம். சட்டி, குதிரை ஓடுகிற அளவுக்குப்பெரிதாக இருக்கவேண்டும். 19.7.62

கே: தங்களைச் பேச்சில் வல்லவர் என்று தங்களைத் தாங்களே சிலர் சொல்லிக் கொள்கிறார்களே!

ப; மற்றவர்கள் சொல்லும்வரை காத்துக்கொண்டிருந் தால் வயதாகிவிடாதோ! 9.8.62

கே: உலகத்திலேயே அதிகமான மொழிகளை அறிந்தவர் யார்?

ப: அச்சு இயந்திரந்தான். அதற்குத் தெரியாத மொழி களா? 9.8.62

கே: பெண்களிடம் உள்ள குறைகளில் இரண்டைச் சொல் லுங்கள்.

ப: ஒன்று: தங்கள் வயதில் பாதியைக்குறைத்துச் சொல்லு வார்கள். இரண்டு: தாங்கள் வாங்கிய சேலையின் விலையில் பாதியைக் கூட்டிச் சொல்லுவார்கள். 9.8.62

கே: காமராசருக்குப் பிறந்த நாள் பரிசு கொடுக்கத் தஞ்சா வூரிலிருந்து ஓடிவந்த மாணவர்களை நீங்கள் பார்த் தீர்களா?

ப: நேரில் பார்க்கவில்லை; பத்திரிகையில் போட்டோ பார்த்தேன். பத்திரிகையில் இதுவரை ஓடிப்போன மாணவர்களின் போட்டோவே வந்து கொண்டிருந் தது. இப்போதுதான் ஓடிவந்த மாணவர்களின் போட்டோ வருகிறது. 9.8.62

கே: இந்தக் காலத்து மனைவி எப்படி இருக்கிறாள்?

ப: அந்தக் காலத்து மனைவி கணவனைக் கண்டாலே எழுந்து நின்று விடுவாள். இந்தக் காலத்து மனைவி, போட்டோ எடுக்கும்போது மட்டும்தானே கணவனுக்குப் பக்கத்திலே நிற்கிறாள். 9.8.62

கே: தங்களின் தொடர்கதைகளை நான் பைண்டு செய்து வைத்திருக்கிறேன்.

ப: படிக்கவா, பைண்டு செய்ய வருகிறதா என்பதைப் பார்க்கவா! தொடர் கதையோ, பைண்டோ-இரண்டில் ஏதாவது ஒன்று நன்றாக இருந்தால் சரி. 9.8.62

கே: உன் ஹெட்வெயிட் ஒடுக்கப்படும் விரைவில்!

ப: நான் மொட்டையடித்த பிறகுமா என்தலையில் வெயிட் இருக்கிறது? இல்லையே! 9.8.62

கே: சென்னையில் எத்தனை நர்ஸிங் ஹோம்கள் இருக்கின்றன?

ப: கிட்டத்தட்ட எத்தனை ஹோட்டல்கள் இருக்கின்றனவோ அத்தனை நர்ஸிங் ஹோம்கள் இருக்கின்றன. 9.8.62

கே: கழுதைச் சகுனம் நல்ல சகுனமா?

ப: நமக்கு இல்லை. துணி வெளுக்கும் தோழர்களுக்கு! கழுதையைத் தேடிக்கொண்டிருக்கும் துணி வெளுக்கும் தோழர்கள், அதன் சகுனத்தைக் கேட்டதும், அது இருக்கும் இடத்தைத் தெரிந்துகொண்டு, அதைப் போய்ப் பிடித்துவிடுவார்கள். 9.8.62

கே: நான் குரங்குகளை விரட்டுவதாகக் கனவு கண்டேன் நல்லதா?

ப: நமது மூதாதையர்களை விரட்டுவதாகக் கண்ட கனவு நல்ல கனவாக ஆகுமா? ஆகாதே! பிள்ளைகளை விரட்டினாலும், விரட்டலாம். பெற்றோர்களை விரட்டக்கூடாதே! 9.8.62

கே: நம் நாட்டில் ரயில்வேயில் டிக்கட் பரிசோதகர்கள் இருந்தும் டிக்கட் வாங்காமல் பயணம் செய்பவர்களால் ஆண்டுக்குப் பல கோடி ரூபாய் நஷ்டம் வருகிறது. ஜப்பானில் ரயில்வேயிலே இந்த டிக்கட் பரிசோதகர்களே கிடையாதாமே!

ப: பாருக்குள்ளே நல்லநாடு—எங்கள் பாரத நாடு என்று பாரதியார் பாடியது ஒருவேளை கிண்டலுக்குத் தானோ? 16.8.62

கே: குழந்தை பிறந்தவுடன் அழுகிறதே என்?

ப: பிற்காலத்தில் நிறைய அழவேண்டியது இருக்கிறது என்றுதான் அப்போதே இயற்கை அழும் ஒத்திகையை அதற்குத் தொடங்கி வைக்கிறது! 16.8.62

கே: பொதுவாக எதிலும் ஆண்களைவிடப் பெண்கள் அதிக மதிப்பெண்கள் எடுக்கிறார்களே! காரணம் என்ன?

ப: மதிப்பெண்களை வரையறுக்கும் பொறுப்பு ஆண்களிடம் இருப்பது காரணமோ? 16.8.62

கே: நீங்கள் எப்போதாவது வடநாட்டைச் சுற்றிப் பார்த்து இருக்கிறீர்களா?

ப: வடநாடா? நானும் பூகோளப் படத்தை எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேன். வடநாடு என்ற பெயரில் ஒரு நாடு இல்லையே! 23.8.62

கே: இரவு எவ்வளவு நேரம் வரை படிக்கலாம்?

ப: கொட்டாவி வரும்வரை படிக்கலாம்? கொட்டாவி வராவிட்டால், கோழி கூவும்வரை படிக்கலாம்! 23.8.62

கே: இந்த உலகத்தில் விசித்திரமானது எது?

ப: இன்று செத்தவனைச் சூழ்ந்து நாளை சாகப் போகிற வர்கள், ஏங்கி ஏங்கி அழுதுகொண்டிருக்கிறார்களே, அதுதான்! 23.8.62

கே: உண்மையான நண்பன் யார்?

ப: உண்மையான நண்பன், காட்டுக்குக் கூப்பிட்டாலும் வருவான். மற்ற நண்பர்கள் ஊட்டிக்குக் கூப்பிட்டால் தான் வருவார்கள்! 23.8.62

கே: தமிழ்நாட்டில் அதிகச் செல்வாக்குள்ள தலைவர் யார்? காமராஜா அல்லது அண்ணாதுரையா?

ப: இருவருமே செல்வாக்கு நிறைந்தவர்கள்தாம். காமராஜர் இந்த வருஷத்துக் காலண்டர், அண்ணா துரை எந்த வருஷத்துக் காலண்டரோ? 23.8.62

கே: நடிகைகளில் பலர் நாவல் படிப்பதாகச் சொல்லுகிறார் களே, பேட்டிகளில் வரும் இந்தச் சேதியை நம்ப லாமா?

ப: நமது நடிகைகளுக்கு நாவல் படிக்க நேரமேது! நான் ஓவல்தான் குடிக்கிறேன் என்று அவர்கள் பேட்டியில் சொல்லி இருப்பார்கள். பேட்டி காணப் போனவரின் காதுக்கு, நான் நாவல்தான் படிக்கிறேன் என்பதுபோல் கேட்டிருக்கும். 23.8.62

கே: ஒருவன் எப்போது நம்மை மதிப்பான்?

ப: நம் பையில் பணம் இருக்க வேண்டும். அதேநேரத்தில் அவன் பையில் பணம் இருக்கக்கூடாது. அப்போது தான் அவன் நம்மை மதிப்பான்! 23.8.62

கே: பெண்கள் முன்னேற்றத்தின் எல்லை எது?

ப: இப்போது ஸ்கூட்டர்களில், பெண் பின்னாலிருக்க ஆண் ஓட்டிச் செல்லுகிறான்; முன்னேற்றத்தின்எல்லை வந்துவிட்டால், பெண் ஸ்கூட்டரை ஓட்டிக்கொண்டிருப்பாள், ஆண் பின்னால் இருப்பான்! 23 8.62

கே: காந்திமகான் இப்போது உயிரோடு இருந்து தென்னாடு-வடநாடு என்று பேசுவதைக் கேட்க நேர்ந்தால் என்ன செய்வார்?

ப: வடநாடா, தென்நாடா, உள் நாடா, வெளி நாடா என்று கேட்டுவிட்டு வெளிநாடே போய்விடுவார்!
23.8.62

கே: எனக்குத் தலைவலி தானாக வருகிறது, தானாகப் போகிறது. இதற்கு என்ன செய்யலாம்?

ப: தானாக வந்து தானாகப் போகும் ஒரு வியாதிக்கு நானாக ஒரு மருந்தைச் சொல்லலாமா? 23.8.62

கே: தலைக்கு விளக்கெண்ணெய் தேய்த்தே எனக்குப் பழக்கமாகிவிட்டது!

ப: குற்றமில்லை. எப்போதும்தலையில் விளக்கெண்ணெய் இருக்கலாம்-பேச்சில்தான் இருக்கக்கூடாது!
23.8.62

கே: மது அருந்தியவர்களில் சிலர் அமைதியாக இருக்கிறார்கள். வேறு சிலர் சிரிப்பும், விளையாட்டுமாக இருக்கிறார்கள். இன்னும் சிலர் குழப்பமாகக் காணப்படுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன?

ப: அமைதியாக இருப்பவர்கள் சொந்தப் பணத்தில் குடித்தவர்கள்; சிரிப்பும் விளையாட்டுமாக இருப்பவர்கள் அடுத்தவன் பணத்தில் குடித்தவர்கள்; குழப்பமாக இருப்பவர்கள் மதுவிலக்கு அமலில் உள்ள பகுதியில் குடித்தவர்கள்! 2.8.62

கே: இப்போது மேடையில் பேசும் பேச்சாளர்கள்வார்த்தைகள் கிடைக்காமல் தடுமாறுகிறார்களே ஏன்?

ப: திருமுருக கிருபானந்தவாரியாரிடம் ஆத்திக வார்த்தைகள் அத்தனையும் அகப்பட்டுக் கொண்டுவிட்டன. திராவிட அண்ணாவிடம் நாத்திக வார்த்தைகள் அத்தனையும் அகப்பட்டுக் கொண்டுவிட்டன. இதனால் தான் மற்றவர்கள் பேசும்போது வார்த்தைகள் கிடைக்காமல் திண்டாடுகிறார்கள்! 6.9.62

கே: பனைமரத்தின் கள் உடம்புக்கு நல்லதாமே?

ப: கொஞ்சம் நல்லதுதான். ஆனால், மதுவிலக்கு அமலில் உள்ள பகுதியில் உட்கார்ந்து குடித்தால் முதுகுக்கு மட்டும் கொஞ்சம் ஆகாது! 6.9.62

கே: ரேடியோவில் ஒலிபரப்பப்படும் இந்தியை எளிமையாக்கப் போகிறார்களாமே?

ப : ஆக்கட்டும். வரவேற்கவேண்டிய ஒன்றுதான். அதோடு ரேடியோவில்கேட்கும் கர்-புர் சத்தங்களையும்கொஞ்சம் எளிதாக்கினால், பாரத மக்களுக்குக் கொஞ்சம் வசதி யாக இருக்கும். மற்ற நாட்டினர் அதையும் இந்தி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்களே! 6-9-62

கே: தமிழில் நிறைய புலமை கொண்டவர்களுக்கும், ஏனைய மொழிகளில் நிறைந்த புலமை கொண்டவர் களுக்கும் இடையே காணப்படும் சிறப்பானவேற்றுமை என்ன?

ப : வயதில்தான் அதிக வேற்றுமை காணப்படும். இருபது வயதிலே தமிழ் நூல்களை முறையாக எடுத்துப் படிக்க உட்கார்ந்தால், முப்பதில் ஒரு கண்ணாடியை வாங்கி மாட்டிக் கொண்டு, அறுபதில்தான் படித்து முடித்துக் கைத்தடியை எடுத்துக் கொண்டு புத்தகத்தைக் கீழே வைக்கலாம். பிற மொழிகளில் ஒரு சில ஆண்டு களிலேயே நிறைவான புலமையைப் பெற்றுவிடலாம்.
6.9.62

கே: பசுவுக்கும் கொம்பு இருக்கிறது. மானுக்கும் கொம்பு இருக்கிறது. மான்களைப்போலவே ஏன் பசுக்களுக்கும் அழகான கொம்புகளைப் படைத்திருக்கக்கூடாது?

ப : அப்பாத்துரையும் ஏன் அண்ணாத்துரையைப் போல இருக்கக்கூடாது என்று கேட்பது போலிருக்கிறது உங்கள் கேள்வி! இயற்கை தனக்கிருக்கிற 'மூடு' பிரகாரம், எப்படி எப்படியோ படைத்து வைத்திருக் கிறது. நாம் நமக்கு இருக்கிற 'மூடு' படிக்கு இரசித்து விட்டுப் போக வேண்டியதுதான்! 6.9.62

கே: சென்னை ஐகோர்ட்டு நூற்றாண்டு விழாவில் வக்கீல்களின் பாட்டுக் கச்சேரி நடந்ததாமே. கேட்டீர்களா?

ப ; கேள்விப்பட்டேன். இதற்குப் பயந்துதான் சீர்காழி கோவிந்தராசன் மலேயாவுக்குப் புறப்பட்டுப் போய் விட்டாரோ! 6.9.62

கே: விடுதலை விழா முதலியவற்றுக்கெல்லாம் மலர்களைப் பயன்படுத்துகிறார்கள்; சரி, ஒருவன் இறந்து பிணமான பிறகும் அவனுக்குப் போட மலர்களைப் பயன்படுத்துகிறார்களே!

ப : இறப்பு என்பதும், இறந்துவிட்டவனைப் பொறுத்த வரையில் ஒரு விடுதலை விழாதானே! 6.9.62

கே: பம்பாயை இந்தியாவின் வாசல் என்கிறார்களே! அதே போல் அண்ணா கூறும் திராவிட நாட்டின் வாசல் எது?

ப : இப்போதைக்குப் பல இடங்களில் உள்ள கலெக்டர் ஆபீஸ் வாசல்கள்தாம்! 6.9.62

கே: திருமணம் ஆனதற்கு அடையாளம் பெண்ணுக்குத் தாலி! ஆணுக்கு?

ப : காலை நேர அடையாளம், கையில் காய்கறிப் பையோடு வீட்டுக்குப் போய்க் கொண்டிருப்பது.

மாலை நேர அடையாளம், கையில் மல்லிகைப்பூப் பொட்டலத்தோடு வீட்டுக்குப் போய்க் கொண்டு இருப்பது! 13-9-62

கே: அக்கால மந்திரிகளுக்கும் இக்கால மந்திரிகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: அக்கால மந்திரிகள் அரசர்களின் தயவில் வாழ்ந்தார்கள்; இக்கால அரசர்கள், மந்திரிகளின் தயவில் வாழ்கிறார்கள்! 13-9-62

கே: நன்றாக ஓடுவதற்கு என்ன செய்யவேண்டும்?

ப: அவசியமான ஓர் ஊருக்கு ரயில் ஏறத் தாமதமாகப் புறப்படவேண்டும்! 13-9-62

கே: சென்னை அரசாங்க பஸ் நிற்குமிடங்களில், பஸ்ஸின் படம் போட்டு ஓர் ஆச்சரியக் குறியும் போட்டிருக்கிறார்களே! இதற்கு என்ன பொருள்?

ப: பஸ் வந்து நிற்பது என்பது அவ்வளவு அதிசயச்செய்தி என்பதை அறிவிப்பதற்காக இருக்குமோ! 13-9-62

கே: அக்காலப் பள்ளிகளுக்கும், இக்காலப் பள்ளிகளுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: அக்காலப் பள்ளிகளில் ஆசிரியரின் குரல் மட்டும் தான் கேட்கும். இக்காலப் பள்ளிகளில் பல குரல்கள் கேட்கின்றன. அன்று ஆசிரியர்களின் கையில் பிரம்பு இருந்தது. இன்று ஆசிரியர்கள்,

பட்டினத்தடிகளைப் போல இன்னும் கையில் கரும்பு எடுக்கவில்லை. இது ஒன்றுதான் பாக்கி !13-9-62

கே : இப்போது நீங்கள் சற்றுபருமனாக இருக்கிறீர்களே, காரணம் என்ன?

ப: முன்பு சற்று மெலிதாக இருந்ததே இதற்குக்காரணம்!

கே: மாறன் எழுதிய 'ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?' என்ற கொள்கை விளக்க நூலை நீங்கள் படித்தீர்களா?

ப: அதைப் படித்த பிறகுதானே ஏன் வேண்டும் இன்பத் திரர்விடம் என்று நான் கேட்க ஆரம்பித்தேன்! 13-9-62

கே: வைரம் ஒரு சிறந்த பொருள். ஆனால் பாங்கில் அதன் பேரில் கடன் வாங்க முடியவில்லையே! காரணம் என்ன?

ப: 'கடன் வாங்குவோர் வைர நெஞ்சம். படைத்தவர்கள். வாங்கிய பணத்தை எளிதில் திருப்பித்தரமாட்டார்கள்' என்பது, அந்த வைரத்தைப் பார்த்ததுமே பாங்குக் காரர்களுக்கு நினைவில் வந்து விடுகிறதோ என்னவோ? 13-9-62

கே: ரஷிய மக்கள் இப்போது ஸ்டாலினை ஏன் வெறுக் கிறார்கள்?

ப: அவர் இறந்துவிட்டதால்! இருக்கிறவர்களை வெறுத் தால் இடுப்பு முறிந்துவிடுமே! 20-9-62

கே: 'உதித்து விட்டான் செங்கதிரோன் தென்திசையில்' என்று முரசொலிப் பத்திரிகையில் தினமும் போட்டு வருகிறதே. சூரியன் உதிக்கும் திசை கூடவா பாவம் கருணாநிதி எம்.எல்.ஏ.வுக்குத் தெரியாது?

ப: திராவிடநாடு கிடைத்த பிறகு நடைபெறப் போகும் நயாபைசா, கிலோமீட்டர் மாற்றங்களைப் போல, கீழ்த்திசையையும், தென் திசை என்று மாற்றிக்கொண் டால் போகிறது! இதற்காகச் செலவு செய்து தயாரித்து விட்ட அந்த பிளாக்கை மாற்றமுடியுமா? 20-9-62

கே: என் நண்பர் ஒருவரை விளையாட்டாக ஏதாவது சொல்லிவிட்டாலும் போதும், பெண் மாதிரி அழுது விடுகிறாரே! ஒருவேளை அவர் பெண்ணாக மாறி வருகிறாரோ?

ப: சேச்சே! அப்படியெல்லாம் மாறவே மாட்டார். பெண்கள் அடிக்கடி எடுத்ததற்கெல்லாம் அழுதது அந்தக் காலத்தில்தான்! இப்போது ஆண்கள்தாம் பெரும்பாலும் அப்படி அழுகிறார்கள்! ஆகையால், நீங்கள் சந்தேகப்படாமல் அவரிடம் தாராளமாகப் பழகுங்கள். 20-9-62

கே: திருமணமானபின் பெண்கள் நெற்றியில் திலகம் இட்டுக்கொள்வது அவ்வளவு அவசியமா?

ப: தபாலில் சேர்க்கப்பட்ட கடிதங்களின் முகப்பில்கூட ஒருமுத்திரை போடுகிறார்களே, ஐயா! கல்யாணமான பெண்கள் இந்தக் கடிதங்களைவிட மோசமா? 20-9-62